George Job Elvey, 1816-1893

St. Geroge's Windsor
77.77.D



பாமாலை 497 செல்வோம் யாம் கோயிலுக்கு

1 செல்வோம் யாம்
கோயிலுக்கு

ஓய்வு நாட்கள் தோறுமே

துதி செய்வோம் யாம் நன்றாய்

ஓய்வு நாட்கள் தோறுமே

பாரும் நேச தேவனே

எங்கள் ஜெபம் கேளுமே

எங்கள் நெஞ்சம் ஆற்றுமே

ஓய்வு நாட்கள் தோறுமே

2 வேலையை நாம் விடுவோம்

ஓய்வு நாட்கள் தோறுமே

உம்மையே யாம்
வாழ்த்துவோம்

ஓய்வு நாட்கள் தோறுமே

ஆபாசம் நீர் நீக்குவீர்

மனம் வசம் ஆக்குவீர்

உமதருள் ஊற்றுவீர்

ஓய்வு நாட்கள் தோறுமே

3 தேவ வாக்கை யாம்
கேட்போம்

ஓய்வு நாட்கள் தோறுமே;

அதைச் சித்தியாக்குமே

ஓய்வு நாட்கள் தோறுமே

போகும் இடம் வருவீர்

அங்கு எம்மில் தங்குவீர்

ஆசீர்வாதம் தருவீர்

ஓய்வு நாட்கள் தோறுமே